(எ) தஞ்சை மாவட்டம், சர்க்கரை ஆலைகள், கரும்புக்கான நிலுவைத் தொகை வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் நெல் உற்பத்திக்கு அடுத்து விவசாயிகள் அதிகம் உற்பத்தி செய்வது கரும்பு. என்னுடைய தொகுதியில் கோட்டூரில் இருக்கக்கூடிய அம்பிகா சர்க்கரை ஆலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தொகுதியில் இருக்கக்கூடிய திருஆரூரான் சர்க்கரை ஆலை, இந்த இரண்டு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு உற்பத்தியாளர்கள் வெட்டி அனுப்பிய கரும்புக்குரிய நிலுவைத் தொகை கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கப்படவில்லை. எனவே, அதுகுறித்து அரசின் கவனத்தை ஈர்க்கிறேன்.*

(ஏ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை நகரம், மேம்பாலம் அமைப்பதால் ஏற்படும் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை நகரத்தில் மேம்பாலம் அமைப்பதற்கு மத்திய அரசு முயற்சி செய்கிறது. அவ்வாறு மேம்பாலம் கட்டினால் மிகுந்த பாதிப்பு ஏற்படும். அதைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு இந்த அரசுக்கு உண்டு. வியாபாரிகள் மற்றும் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்படுவார்கள். ஆகவே, அப்படிப்பட்ட திட்டத்தைக் கைவிட. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நான் அதனால்தான் விளக்கமாகப் பேசக் கூடாது என்று சொன்னேன். நீங்கள் விதி 55-ன்கீழ் என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதைச் சொல்லி, அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி உட்காருங்கள்.*

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்கிறேன், சொல்கிறேன். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு மக்களுக்கு பாதுகாப்பு வழங்கிட . . .*

2019 பிப்ரவரி 14]

(ஐ) தாம்பரம் மார்க்கெட் பகுதி, போக்குவரத்து நெரிசலைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, நீங்கள் சொல்லுங்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு அமைச்சர்கள் எல்லாம் பதில் சொல்ல முடியாது. அதற்கு நேரம் இல்லை.* (குறுக்கீடு) *நீங்கள் அமைச்சரிடம் ஏற்கெனவே பேசியிருந்தால் நான் என்ன செய்யமுடியும்? அமைச்சர் பதில் சொல்வார் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? இப்படியெல்லாம் பேசுவது முறையல்ல. பேரவைத் தலைவர் என்று ஒருவர் எதற்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்.* (குறுக்கீடு) *உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா, சொல்லுங்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் மார்க்கெட் பகுதி என்பது* Highways, Railway line *மற்றும் மார்க்கெட் பகுதியை ஒட்டியிருக்கின்ற மிகப் பெரிய வியாபார ஸ்தலம். போக்குவரத்து நெரிசல் அதிகமாக ஏற்படுகிறது. அதற்கு முக்கியக் காரணம் நடைபாதைக் கடைகள், ஆட்டோக்கள் மட்டுமல்ல. சென்னையை ஒட்டியிருக்கின்ற. . .*

(ஒ) மன்னார்குடி தொகுதி, முக்குளம் சாத்தனூர், பட்டா வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள்.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, சொல்லுங்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கஜா புயலின் கோரத் தாண்டவத்தால் சிக்கித் தவிக்கும் எங்கள் மன்னார்குடியில் பல இடங்களில் பட்டா கிடைக்காமல் மக்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள். குறிப்பாக முக்குளம் சாத்தனூர் பகுதியில் 300 ஏக்கருக்கு மேலாக பட்டா வழங்கப்படாததால் அரசு கொடுக்கும் நிவாரணம் எதுவும் கிடைப்பதில்லை. குறிப்பாக. . .*

(ஏ) கன்னியாகுமரி மாவட்டம், தக்கலை நகரம், மேம்பாலம் அமைப்பதால் ஏற்படும் பாதிப்பு—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, உட்காருங்கள், அவ்வளவுதான். மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.*

[*2019 பிப்ரவரி 14*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதியின் தலைமையிடமான தக்கலை பகுதி வழியாக* N.H.47 *சாலை சென்றுகொண்டிருக்கிறது. இப்போது புதிதாக, அதற்கு நிகராக புதிய வழித் தடமாக நான்கு வழிச்சாலைப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இந்நிலையில் தக்கலையில் ஒரு மேம்பாலம் அமைப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன. அந்த மேம்பாலத்திற்கு தேவை இருக்கிறதா, இல்லையா என்பது நான்கு வழிச் சாலைப் பணிகள் நடைபெற்று முடிந்தபின். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், சொல்லுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கையை சொல்ல வேண்டும். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கோரிக்கை என்று சொல்லி நீங்கள் பேசிக்கொண்டிருந்தால் நான் என்ன செய்வது?* (குறுக்கீடு) *நீங்கள் கோரிக்கையைச் சொல்ல வேண்டியதுதானே! நானா வேண்டாம் என்று சொன்னேன்.*

திரு. த. மனோ தங்கராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன்.*

(ஓ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன் மலை, அடிப்படை பணிகள் மேற்கொள்ள வனத் துறை அனுமதி மறுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதற்குத்தான் நான் உங்களை அழைத்தேன்.* (குறுக்கீடு) *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா. உதயசூரியன், சொல்லுங்கள்.* (குறுக்கீடு) *இல்லை, இல்லை, நீங்கள் உட்காருங்கள்.* (குறுக்கீடு) *நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உதயசூரியன் விதி 55-ன்கீழ் என்ன எழுதிக் கொடுத்தீர்களோ அதை மட்டும் சொல்லுங்கள்.*

திரு. தா. உதயசூரியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சங்கராபுரம் தொகுதியிலுள்ள கல்வராயன் மலையில் உள்ள பட்டா இடங்களுக்கு நிலத்தைச்*